# பொதுக்காலத்தின் பதினாறாம் ஞாயிறு

# திருவழிபாடு ஆண்டு - B

# 2024-07-21

*(இன்றைய வாசகங்கள்:*

*இறைவாக்கினர் எரேமியா நூலிலிருந்து வாசகம்:* 23: 1-6,

*பல்லவி: ஆண்டவரே என் ஆயர்; எனக்கேதும் குறையில்லை:,*

*திருத்தூதர் பவுல் எபேசியருக்கு எழுதிய் திருமுகத்திலிருந்து வாசகம்:* 2: 13-18,

*மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்:* 6: 30-34)

*திருப்பலி முன்னுரை*

*இறைவனுக்குரியவர்களே, பொதுக்காலத்தின் பதினாறாம் ஞாயிறு திருப்பலியை கொண்டாட உங்களை அன்புடன் அழைக்கிறோம். இறைவனின் மந்தையாகிய மக்கள் முறையான வழிநடத்துதல் இன்றி சிதறிப்போகும்போது, ஆண்டவர் நமக்காக புதிய ஆயர்களை வழிகாட்டிகளாக அனுப்புகிறார் என்பதை இன்றைய திருவழிபாடு நமக்கு நினைவூட்டுகிறது. இறைவனின் பராமரிப்பை வழங்கும் திருச்சபையின் திருப்பணியாளர்களைப் பற்றி சிந்திக்க நாம் அழைக்கப்படுகிறோம். இறைவனால் நம்மிடம் அனுப்பப்பட்ட மேய்ப்பர்களாகிய அவர்களை ஏற்று வாழும் வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.*

## ***விசுவாசிகள் மன்றாட்டுகள்:***

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*மேன்மையானவராகிய இறைவா!*

*உம் திருப்பணியின் நிமித்தம் பல்வேறு துன்பங்களால் துன்புறும் எம் திருஅவையின் அனைத்துத் திருப்பணியாளர்களையும் ஆசீர்வதித்து, நீர் உமது இறையாட்சிப் பணியின் மேன்மையைப் பொழிந்திட வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அனைத்தையும் படைத்த இறைவா!*

*ஆயனில்லா ஆடுகளாய் இருந்த எங்களுக்கு நீர் கொடுத்த ஆயன்கள் வழியாக நீரே எங்களை வழிநடத்துகின்றீர் என்ற உண்மையை உணரும் மனதைத் தந்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*ஒன்று சேர்க்கும் இறைவா!*

*நாட்டை ஆளும் தலைவர்கள் நீதியோடும், நேர்மையோடும் மக்களை வழிநடத்த நல்ல மனதைக் கொடுத்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*இரக்கத்தின் இறைவா!*

*பரிவும் கடவுளின் அன்பும் ஒரு நல்ல ஆயரின் செயல்திட்டங்கள் என்பதை அறிந்து அதன்படி வாழும் வரமருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அன்பு இறைவா!*

*தனிமையாய் இருந்த போது சீடர்களுக்கு இறையாட்சி பற்றிய - மறைபொருளை விளக்கிக் கூறியது போல், நாங்களும் தனிமையாய் இருக்கும்போது, உமது வார்த்தை வாழ்வளிக்கும் உணவாக எங்களில் தங்கிட வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*மக்கள்மீது பரிவுகொண்டு அவர்களுக்குக் கற்பித்த இயேசுவே, உம்மைப் போற்றுகிறோம்.*

*ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்கள்மீது பரிவுகொண்டு, அவர்களுக்கு விழிப்புணர்வு வழங்கும் பணியை நாங்கள் செய்ய உமது தூய ஆவியின் ஆற்றலை எங்களுக்குத் தந்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*